**பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளிக்குழு**

**தமிழ்ப் பட்டிமன்றம்- இறுதிச் சுற்று-2**

'சொலன்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை

இகல்வெல்லல் யாருக்கும் அரிது '

என்ற வள்ளுவப் பெருந்தகையான் வாக்கிற்கேற்ப மாணவர்களின் வாதத் திறமையை வெளிப்படுத்தும் விதமாகஇரண்டாமாண்டு தமிழ்ப் பட்டிமன்றத்தின் இறுதிச் சுற்று 30.03.2021 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1:45 மணியளவில் இணையவழியில் இறைவணக்கத்துடன் தொடங்கப்பட்டது. இச்சுற்றில் கே.கே.நகர்ப் பள்ளியும் நுங்கம்பாக்கம் பள்ளியும் களமிறங்கின. இச்சுற்றின் தலைப்பு 'இன்றைய சமுதாயத்தில் ஆண்களே நலிந்த வர்க்கத்தினர் ' என்பதாகும். இச்சுற்றுக்கு செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியின் தமிழ்த்துறைத் தலைவர் திருமதி திலகவதி, SBOA பள்ளியின் ஆசிரியர் திரு சுந்தர ராமன், இராணி மேரி கல்லூரியின் பேராசிரியர் திருமதி கிருத்திகா போன்றோர் நடுவர்களாகக் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

இந்நிகழ்வு இணையவழியில் நேரலையாக மாணவர்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது. ஆண்கள் நலிந்த வர்க்கத்தினர் அல்ல என கே.கே.நகர்ப் பள்ளி மாணவர்களும்( R.Poojha Shri 10G, S.Shreya 11G1,S.Ritika 9H, B.Gautam10E, S.Srinidhi11E1), ஆண்கள் நலிந்த வர்க்கத்தினர் தான் என்று நுங்கம்பாக்கப் பள்ளி மாணவர்களும் தங்கள் பேச்சாற்றலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தினர். மாணவர்கள் விவாதத்திறன் குறித்து நம் பள்ளியின்

Dean and Director Mrs. ஷீலா இராஜேந்திரா அவர்களும், Executive Trustee

திரு Y.G. இராஜேந்திரா அவர்களும் பாராட்டிப் பேசினர். மேலும் நடுவர்கள் மூவரும் மாணவர்களின் பேச்சாற்றல் மிகவும் அருமையாக இருந்தது எனப் பாராட்டினர். இச்சுற்றில் கே.கே.நகர்ப் பள்ளி வெற்றி பெற்று கோப்பையை வென்றது. மேலும் சிறந்த பேச்சாளர்களாக செ.ரித்திகா (K.K.N.) , ஆ. ரேஷ்மி (NGM), பா.கௌதம் (K.K.N.), வி.கே. இராம் (NGM) தேர்ந்தெடுக்கப்பட்டனர். நன்றியுரையுடன் இந்நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.




Dr. S. Sundararaman
p
psbb ngm
Teacher Indrani
Srividhya Chan...
Aasha Pillai
Yamuna Devi (TEACH...
Sheela Rajendra
PSBB
Teacher MAHALAKSH...
Malathy Santhanam
C
Chandra Ramani
Ananthababu R
100121 Nissika
Sudha Seshadri
Vasanthi.S
Vijayalakshmi S...
Indira Vaidyanathan
Chandra Ramani
Thilaga Martin
Syna Binoy
vijaya
100129 sumukhi subr...
Kamala Krishnan
Radha Krishnan
T
Nithia T